சாட்சிகளின் வாக்குமூலம்

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 240/2010**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்

வாக்குமூலம் – வா.சா–1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வராஜ் | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 16ம் நாள் சாட்சியம்.

---

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், படித்துப்பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்கள்

1. 31.01.2007 தேதியிட்ட பல்லடம் முன்சிப் கோர்டில் வழங்கப்பட்ட தீர்ப்பு சான்றிட்ட நகல்.

2. 20.08.2007 தேதியிட்ட வாதியின் தாயார் கண்ணம்மாளின் இறப்பு சான்றிதழ் அசல்.

3. 31.12.2009 தேதியிட்ட வாதியின் தகப்பனார் முருகசாமி கவுண்டரின் இறப்பு சான்றிதழ் அசல்.

4. 30.01.2010 தேதியிட்ட கோவை மாவட்ட ஆட்சியருக்கு வாதி வழக்கறிஞர் கொடுத்த அறிவிப்பு அலுவலக நகல்.

5. 04.02.2010 தேதியிட்ட ஒப்புகை அட்டைகள் (3 எண்ணிக்கை)

6. 25.09.1918 தேதியிட்ட வாதியின் தாத்தா நஞ்சப்ப கவுண்டர் மற்றும் தங்கா கவுண்டர் செய்துகொண்ட பாகசசாசனம் சான்றிட்ட நகல்.

7. 08.11.1989 தேதியிட்ட வாதியின் தந்தை முருகசாமி கவுண்டர் மற்றும் மாரப்ப கவுண்டர் செய்துகொண்ட பாகசாசனம் சான்றிட்ட நகல்.

8. 24.02.2010 தேதியிட்ட முருகசாமி கவுண்டர் மற்றும் மற்றவர் பெயர்களில் உள்ள தாவா சொத்திற்கான பட்டா அசல்.

ஆகியவற்றை வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேற்படி ஆவணங்கள் முறையே **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8** ஆவணங்கள் ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2026.02.16 18:25:47 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.